# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 3rd Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம்<br>Christian Civilization | Three Hours<br>Gr -12 (2022) | 49 | T | I,II |


## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. எகிப்து, மொசப்பத்தேமிய, பபிலோனிய நாகரிகங்கள் நைல்நதி, யூப்பிரடீஸ் - தைக்கிறிஸ் ஆற்று வெளிகளில் வளர்ந்துள்ள காலப் பகுதியைக் குறிப்பது.
   1) கி.மு. 3000  2) கி.மு. 5000  3) கி.மு. 1000
   4) கி.மு. 8000  5) கி.மு. 40000

02. "பைப்பிரஸ்" என்ற புல் எழுதுகோலாகப் பயன்படுத்திய நாகரிகம் எது?
   1) மொசப்பத்தேமியா  2) சுமேரியா  3) எகிப்து  4) அசீரியா  5) சீரியா

03. திருத்தூதர்களும், ஆரம்பக் கிறிஸ்தவர்களும் அதிகம் பயன்படுத்திய மொழி எது?
   1) இலத்தீன்  2) கொய்னேயம்  3) கிபுரு
   4) எபிரேயம்  5) கிரேக்கம்

- A – பெத்தானியா எருசலேமுக்கு கிழக்கே 3.2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.
  B – எருசாலேமிலிருந்து 27.2 கிலோ மீற்றர் தொலைவில் இவ்வூர் உள்ளது.
  C - இலாசரும், அவரது சகோதரிகளான மார்த்தா, மரியா வாழ்ந்த இடம்.
  D – பாவிப் பெண்ணொருவர் நறுமணத் தைலத்தால் இயேசுவின் காலடிகளில் பூசியது.
  E – திருத்தூதரான பேதுரு, அந்திரேயா என்பவர்களின் ஊரும் இதுவாகும்.

04. மேற்படி கூற்றுக்களுள் பெத்தானியா நகருடன் தொடர்புடையவை.
   1) ABC  2) ACD  3) BCD  4) ACE  5) ADE

05. இஸ்ரயேலரை துன்புறுத்திய பெலிஸ்தியரை தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்த நீதித் தலைவர்,
   1) தெபோரா  2) ஒத்னியேல்  3) இல்தா  4) கிதியோன்  5) சிம்சோன்

06. கி.மு 1720 – 1550 கால கட்டத்தில் எகிப்து தேசத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த இனத்தவர்கள்.
   1) கிக்கோஸ்  2) பாரசீகர்  3) சுமேரியர்  4) இத்தியர்  5) அசீரியர்

07. "எஸ்ரா" பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றது.
   1) தலைமைக் குருவான, ஆரோனின் குடும்பத்தில் வந்த சாராயியாசின் மகன்.
   2) திருச்சட்ட வல்லுனர்.
   3) பல எதிர்ப்புக்கள் மத்தியில் கி.மு. 444 இல் எருசலேம் நகர மதிலைக் கட்டியெழுப்பினார்.
   4) ஞான வாழ்விலும், நன்நெறியிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
   5) வழிபாட்டைப் புதுப்பித்து உடன்படிக்கைக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்தார்.

08. அரசியல் நோக்கத்திற்காக பரிசேயர்களின் ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொண்டவர் யார்?
1) பெரிய ஏரோது 2) 1வது ஏரோது அகிரிப்பா 3) ஏரோது அந்திப்பா
4) பிலிப்பு 5) அர்க்கெலா

- A – நோயுற்றவர்கள், இடையர்கள், கூலிவேலை செய்பவர்கள்.
  B – ஒரு கல்லின் மீது அமர்த்தி ஏலம் விட்டனர்.
  C – பெண்கள், ஆண்களுடன் சரி நிகராக அமர்ந்து உணவருந்தக் கூடாது.
  D – ஒன்று அல்லது இரண்டு செப்புக் காசுகளுக்கு விற்கப்பட்டனர்.

09. மேற்படி கூற்றுக்களுள் "அடிமையுடன்" தொடர்புடையது.
1) AB 2) AC 3) AD 4) BD 5) BCD

10. கி.பி. 70 இல் நடைபெற்ற யூத – உரோம யுத்தத்தின்போது தாக்குதல் தீவிரமாய் அமைந் திருந்ததுடன், "மசாதா" என்ற இடத்தை தமது கட்டுப்பாட்டில் நீண்ட காலம் வைத்திருந்த யூத சமய குழு யாது?
1) எசீனியர் 2) தீவிரவாதிகள் 3) மறைநூல் அறிஞர்
4) பரிசேயர் 5) சதுசேயர்

11. "ஷேமா" என்பதன் பொருள்
1) தம்மிடம் அன்பு கொள்வது 2) ஒரே இறைவன்
3) இஸ்ரயேலே கத்தருக்கு செவி கொடு 4) என் ஆண்டவர்
5) உடன்படிக்கையின் இறைவன்

12. இறையாட்சி அனைத்து மக்களையும் வரவேற்கும், பராமரிக்கும் தன்மை கொண்டது என்பதை வெளிப்படுத்தும் புதுமைகளுள் ஒன்று.
1) ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல்
2) தண்ணீரை இரசமாக்குதல்
3) நயீன் பட்டணத்து விதவையின் மகனை உயிர்ப்பித்தல்.
4) நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளரை குணமாக்குதல்
5) இரத்தப் போக்கிலிருந்த பெண்ணைக் குணமாக்குதல்.

13. சமாரியர்கள், வரிதண்டவோர், பாவிகள் என ஒதுக்கப்பட்டவர்களுடன் தம்மையும் ஒன்றுபடுத்தி, அவர்களுடன் ஒருவராக இயேசுவும் வாழ்ந்தார் என்பதை உணர்த்தும் அடிப்படைப் பண்புகளுள் ஒன்று.
1) நேர்மை 2) பரிவிரக்கம் 3) அன்பு
4) விட்டுக்கொடுப்பு 5) உறவாகுதல்

14. வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்குச் சென்றவர்.
2) பேதுரு 2) கிளேயோப்பா 3) மகதலாமரியா
4) அன்புச்சீடர் 5) தோமா

15. தூய ஆவியின் வருகையினால் சீடர்களில் ஏற்பட்ட மாற்றங்களுள் பொருந்தமற்றது.
1) பலமொழிகளில் பேசுதல் 2) ஒன்றாகக்கூடி விருந்துண்ணுதல்
3) அறிவு தெளிவு பெறுதல் 4) அரும் அடையாளம் செய்தல்
5) சிறந்த பேச்சாளராக மாறுதல்

16. “கெனோசிஸ்” என்ற கிரேக்க சொல்லின் பொருள்

1) 2ம் வருகை 2) மனுமகனின் நாள் 3) வெறுமையாகுதல்

4) உயிர்த்தெழுதல் 5) இறையருள்

- பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பந்தியில் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

B – ஓய்வு நாளையும் பிரமாணிக்கமாக அனுசரித்தனர்.

C – பிறர் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களாய், அவர்கள் தேவைகளை நிறைவு செய்பவர்களாய் வாழ்ந்தனர்.

D – நற்செய்திப் பணிக்கு தங்களை ஆயததப்படுத்த இறைவனை, கிறிஸ்துவை பற்றி அறிவதில் மிகவும் ஆர்வமாய் இருந்தனர்.

E - தத்தம் உடைமைகளை தமக்குச் சொந்தமானதாய்க் கருதாமல், பொதுப் பொருட்களாகக் கொண்டு வாழ்ந்தனர்.

17. மேற்படி கூற்றில் தொடக்க கிறிஸ்தவர்களின் “அப்பம்பிடுதல், பகிர்ந்து வாழ்தல்” குறித்த சரியான கூற்றுக் காட்டும் தொகுதி.

1) ABC 2) ACD 3) BDE 4) ACE 5) BCD

- கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 18 – 20 வரையிலான வினாக்களுக்கு விடை யளிக்குக.

| A | B | C | D |
|---|---|---|---|
| கி.பி. 46 – 49 | திமோத்தேயு, தீத்து, லூக்கா | யூத கலாசாரத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும், புறவினக் கிறிஸ்தவர்களுக் கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது | கி.பி 50 - 52 |
| **E** | **F** | **G** | **H** |
| கிறிஸ்வதம் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது | திருத்தூதர் போதுருயோப்பா அனுபவத்தையும் மற்றும் கொர்னேலியுவின் வீட்டில், இடம்பெற்ற அனுபவத்தையும் கூறியது. | எபேசு, கொரிந்து துரோவா, மிலேத்து செசரியா | சைப்பிரஸ்தீவு, பெருகை, இக்கோனியா |

18. பவுலின் 1ம் மறைத் தூதுப் பயணத்துடன் தொடர்புடைய சோடி.

1) CF 2) AE 3) BH 4) CG 5) AH

19. எருசலேம் சங்கத்துடன் தொடர்புடைய சோடி.

1) CF 2) CE 3) CG 4) CH 5) BF

20. பவுலின் 2ம் மறைத்தூதுப் பயணத்துடன் தொடர்புடைய சோடி.

1) AE 2) BG 3) DE 4) CG 5) DH

(20x1=20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி (அ) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

### பகுதி "அ"

*01.* 1) நாகரிகத்தின் இயல்புகளாகக் கருதப்படுபவை நான்கினைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*
2) எகிப்திய நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*
3) திருச்சபையானது கிரேக்க மொழியை பயன்படுத்தியமைக்கான ஆதாரங்கள், சான்றுகளைக் கூறி விளக்குக. *(6 புள்ளிகள்)*
4) உரோமையருடைய சமூக, அரசியல் அமைப்பு முறைகளையும், அது திருச்சபையில் ஏற்படுத்திய செல்வாக்கினையும் விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

*02.* 1) பலஸ்தீனாவுக்கு வழக்கிலிருந்த வேறு பெயர்கள் நான்கினைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*
2) செப்பேலா சமவெளியின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*
3) சீனாய் மலை உடன்படிக்கையின் முக்கியத்துவத்தினை விளக்குக. *(6 புள்ளிகள்)*
4) சாலமோன் மன்னனின் ஆட்சிச் சிறப்புக்களை எடுத்துக்கூறி விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

*03.* 1) உரோமைப் பேரரசர்கள் நால்வரைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*
2) பாலஸ்தீன யூதர்களின் பண்புகள் நான்கு தருக? *(4 புள்ளிகள்)*
3) யூத சமயக் குழுக்களில் எசீனியர்களது வாழ்க்கை முறைகளை விளக்குக. *(6 புள்ளிகள்)*
4) யூதர்களுடைய சமய மரபுகளில் ஓய்வுநாள் அனுசரிப்பின் முக்கியத்துவத்தினை விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

### பகுதி "ஆ"

*04.* அ) இயேசுவின் மலைப் பொழிவு பற்றிய அறிவுரையில் இடம்பெறுகின்ற அடிப்படைக் கோட்பாடுகள், ஒழுக்கநெறிகளை எவ்வாறு பின்பற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகின்றது. என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) இன்றைய சமுதாயத்தில் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய இயேசுவின் படிப்பினைகள் அயலவர்கள் மத்தியில் நீர் எவ்விதம் கடைப்பிடித்து வாழ்வீர் என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

*05.* அ) இயேசுவின் புதுமைகளுள் குணமளித்தல், குணப்படுத்தல் என்பன இஸ்ரயேலருக்கு மட்டுமன்றி, அனைவருக்கும் அவரது பரிவன்பு மற்றும் மனித மாண்பை மதிக்கும் செயற்பாடுகளாக விளங்கியது என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) கோவிட் - 19 பெருந்தொற்றுக் காலத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கும், இன்றைய சமூகத்திலே நீர் ஆற்றக்கூடிய பிறர் அன்புப் பணிகள் பற்றி விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

*06.* அ) இயேசுவின் மரணம் பற்றி தூய யோவானின் சிறப்புக் கருத்துக்களை குறிப்பிட்டு விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) இயேசுவினுடைய உயிர்ப்புப் பிரசன்னமானது "எல்லைகளைக் கடந்த பிரசன்னமாகின்றது. அவரில் விசுவாசம் கொண்டவர்களிடையே அவர் வாழ்கிறார்." என்ற கூற்றின் அடிப்படையில் உமது கருத்துக்களை முன் வைக்குக. *(10 புள்ளிகள்)*

*07.* அ) தூய பவுல் தமது மறை பரப்புக்குப் பயன்படுத்திய வழிமுறைகளைக் குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு நிறைவு செய்தார். என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) பவுலின் வாழ்க்கையினூடாக கிறிஸ்தவ மாணவனாகிய நீர் பெற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகளைக் கூறி விளக்குக. *(10 புள்ளிகள்)*